# தேவனுடைய அதிசயம்

உலகில் பலவிதமான அதிசயமான அனுபவங்களை நாம் கேள்விப்படுகிறோம்.
நாம்கூட அப்படிப்பட்ட அனுபவத்தை பெற்றவர்களாக இருக்கலாம்.
தேவன் அதிசயங்களைச் செய்ய வல்லவர்.
தேவனல்லாத மற்றவர்களும் அதிசயங்களைச் செய்யவல்லவர்கள்.

1. தேவனுடைய அதிசயங்கள் தேவலோகத்திற்கும் நம்மை தகுதிபடுத்த வல்லமையுள்ளது.
2. மற்றவர்களுடைய அதிசயங்கள் இந்த உலகத்தோடு முடிந்துவிடும்.

உங்களுக்கு நேரமிருக்கும்போது,
வேதாகமம்: பழைய ஏற்பாடு: யாத்திராகமம் அதிகாரம் 7 - 15 வரை தயவுசெய்து வாசியுங்கள்.

மேல்குறிப்பிட்ட வேதாகம பகுதியில் எகிப்திய மக்கள் செய்த அதிசயங்களையும், மோசே என்ற பக்தர் மூலமாக தேவன் செய்த அதிசயங்களையும் சிந்தித்துப் பாருங்கள்.

தேவன் தன்னைப்பின்பற்றிய மக்களை அதிசயமாக பாதுகாத்து, தீமைக்கு விலக்கி, தொடர்ந்தும் அவரை விசுவாசித்த மக்களை, தான் வாக்குக் கொடுத்த தேசத்துக்கு கொண்டு சென்றார். வேதத்தை மேலும் தொடர்ந்து வாசித்தால் விளங்கும்.

மக்கள் தன் மாம்சீக பெலவீனத்தினாலே, தேவகட்டளைகளைப் பின் பற்றமுடியாமல் போனபோதெல்லாம் தேவன் அவர்களைக் கண்டித்தும் மன்னித்தும் அதிசயமாக வழிநடத்தி வந்தார்.

எந்த மனிதனாலும், தேவனின் பிரதான நோக்கத்திற்கு மக்களை முழுமையாக வழிநடத்த முடியவில்லை. நம் ஒவ்வொருவர் மேலும் பிரியமுள்ள தேவனே மனிதனாக நம் மத்தியிலே வந்து, அவரே எண்ணிலடங்கா அளவிற்கு அதிசயங்களைச் செய்து, இவ்வுலக வாழ்க்கைக்குப் பிறகு நாம் அடையவேண்டிய தேவலோகத்திற்கும் நம்மைத் தகுதிபடுத்த, புதிய ஏற்பாட்டை ஏற்படுத்தி, இன்றும் நம் மத்தியிலே ஜீவனுள்ள வார்த்தையாக வாழ்ந்துகொண்டிருக்கிறார். இது தேவனால் நமக்காக ஏற்படுத்தப்பட்ட மிகவும் அதிசயமான ஏற்பாடு.
வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டு பகுதியில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்ற 4 ஆகமங்களை பக்தியோடும் ஜெபத்தோடும் வாசித்து, தியானித்து விசுவாசித்துப் பாருங்கள்.

இந்த புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்.
இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.
(வேதாகமம்: புதிய ஏற்பாடு: யோவான்:20:30-31)

தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.
(வேதாகமம்: புதிய ஏற்பாடு: யோவான் 3:16)

சகல பரிபூரணமும் இயேசுகிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ள தேவனுக்குப் பிரியமாயிற்று.
(வேதாகமம்: புதிய ஏற்பாடு: கொலோசெயர் 1:19-20)

ஆண்டவருடைய நாமமே “அதிசயமானவர்”....அவரை விசுவாசித்து, அதிசய அனுபவங்களைப் பெற்று, இவ்வுலகத்தில் ஆண்டவருடைய கிருபையோடு வாழ்ந்து, அவ்வுலக வாழ்க்கைக்கு நமது ஆத்மாவைக் காத்துக்கொள்ள, நித்தியபிதாவாகிய ஆண்டவர் உங்களை ஆட்கொண்டு ஆசீர்வதிப்பார்.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (திருக்குறள் 247)
**As to impoverished men this present world is not;**
**The 'graceless' in you world have neither part nor lot. (KURAL 247)(Indian Literature)**